(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 4(8).]**

# பாராளுமன்றத்தின்
# 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2026 ஒக்தோபர் 09, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2026 ஒக்தோபர் 20, செவ்வாய்க்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

இலங்கைக் கிரிக்கெட் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— வியாபாரத் திறனை அதிகரித்தல், நிதியளிப்பிற்கான அணுகலை மேம்படுத்துதல், தொழினுட்பத்திறனை ஊக்குவித்தல் மற்றும் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் என்பவற்றின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் (SME) துறையைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் அரசாங்கத்தினால் 'நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறை அபிவிருத்தி வேலைத்திட்டம்' (இப்பிரிவில் இனிமேல் 'SDP' எனக் குறிப்பிடப்படும்) ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினாலும்;

பங்குபற்றும் நிதி நிறுவனங்களின் ஊடாகச் சலுகைக் கடன்களை வழங்குவதன் மூலம் விவசாய மற்றும் விவசாய வர்த்தகத் துறைகளைப் பலப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் 'விவசாயப் பெறுமதிச் சங்கிலி நிதியளிப்பு மற்றும் வணிகமயமாக்கல் துறை அபிவிருத்தி வேலைத்திட்டம்' (இப்பிரிவில் இனிமேல் 'AVC' எனக் குறிப்பிடப்படும்) ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினாலும்;

மேற்கூறப்பட்ட 'SDP' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நூறு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD 100 மில்லியன்) கொள்கை சார்ந்த கடனையும் (Policy-Based Loan - PBL) நூறு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD 100 மில்லியன்) நிதி இடைநிலைக் கடனையும் (Financial Intermediation Loan - FIL) உள்ளடக்கியவாறும், மற்றும் மேற்சொல்லப்பட்ட 'AVC' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக முப்பது மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD 30 மில்லியன்) கொள்கை சார்ந்த கடனையும் (PBL) எழுபது மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD 70 மில்லியன்) நிதி இடைநிலைக் கடனையும் (FIL) உள்ளடக்கியவாறும் நிதியுதவி அளிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) உடன்பட்டுள்ளமையினாலும்;

மேலும், 'SDP' வேலைத்திட்டத்தின் நூறு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD 100 மில்லியன்) தொகையைக் கொண்ட நிதி இடைநிலைக் கடன் கூறும், 'AVC' வேலைத்திட்டத்தின் எழுபது மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD 70 மில்லியன்) தொகையைக் கொண்ட நிதி இடைநிலைக் கடன் கூறும், அவசியமான தகுதிக்காண் ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் அடையாளம் காணப்படும் நிதி நிறுவனங்கள் ஊடாகத் தகுதியான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு கடனாக வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய நிறுவனங்கள் இந்நிதியங்களை விநியோகிப்பதற்காக நிதி இடைநிலையாளர்களாகச் தொழிற்படவுள்ளமையினாலும்;

2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் 39 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் விதிகளுக்கு அமைவாக, அரச நிறுவனமொன்றல்லாத வேறேதேனும் நிறுவனத்தின் பொறுப்புகள் தொடர்பான நிதியங்களை கடனாக வழங்குவதற்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் அவசியமாகின்றமையினாலும்;

எனவே, தற்போது, 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு மற்றும் 39 ஆம் பிரிவுக்கு அமைவாக, அவசியமான தகுதிகாண் ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் அடையாளங் காணப்பட்டுள்ள பின்வரும் அரச வங்கிகளின் ஊடாக 'நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறை அபிவிருத்தி வேலைத்திட்டம்' ('SDP') மற்றும் 'விவசாயப் பெறுமதிச் சங்கிலி நிதியளிப்பு மற்றும் வணிகமயமாக்கல் துறை அபிவிருத்தி வேலைத்திட்டம்' ('AVC') ஆகிய வேலைத்திட்டங்களுக்கு அமைவாகவும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக் கடன் வேலைத்திட்டங்களின் கீழும் நிதி இடைநிலைக் கடன்களை வழங்குவதற்குத் தேவையான நிதியை வழங்குதல் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனவும், 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டம் மற்றும் ஏனைய பொருந்தக்கூடிய எழுதப்பட்ட சட்டங்களின் விதிகளுக்கு அமைவாக, இப்பிரேரணையை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அதிகாரமளிக்கப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:—

1. மக்கள் வங்கி;
2. இலங்கை வங்கி;
3. பிரதேச அபிவிருத்தி வங்கி;
4. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி; மற்றும்
5. வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபன வங்கி.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, கொத்தலாவலப் பாதுகாப்புப் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் கீழ் 2024.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.11.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை (2023),— 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, கொத்தலாவலப் பாதுகாப்புப் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் கீழ் 2025.10.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.11.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

# 2026 ஒக்தோபர் 21, புதன்கிழமை
# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

குடிவரவுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
**(2026, ஒக்தோபர் 21, புதன்கிழமை)**

2329/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 9ஆம் பிரிவுடன் ஏற்புடையதாக திருத்தத்தை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படிக் குழுவின் அங்கத்தவர்கள் யாவரென்பதையும்;

(iii) மேற்படிக் குழு நியமிக்கப்பட்ட திகதியும், குழுவின் பரிந்துரைகளும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரிவிற்குரிய திருத்தங்களை அங்கீகாரத்திற்காக துரிதமாகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திருத்தங்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான காலவரையறை யாதென்பதையும்;

(iii) மேற்படி பிரிவைத் திருத்துவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டிருப்பின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2357/2026

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 'அஸ்வெசும' தரவு முறைமையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இடம்பெற்ற இரட்டைக் கொடுப்பனவுகளின் கீழ் செலுத்தப்பட்ட தொகையும், அவ்வாறு கொடுப்பனவுகளைப் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கையும் யாதென்பதையும்;

(ii) அவற்றுள் இதுவரையில் அறவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) எஞ்சியுள்ள தொகையை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தொழில்நுட்பக் கோளாறுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினரைக் கண்டறிவதற்காக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் முடிவுகள் யாவையென்பதையும்;

(iii) அஸ்வெசும தரவு முறைமை மற்றும் கொடுப்பனவு முறைமை தொடர்பாக சுயாதீன தகவல் தொழில்நுட்பக் கணக்காய்வொன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி கணக்காய்வை மேற்கொண்டத் திகதியும், நிறுவனமும் யாதென்பதையும்;

(v) அதற்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2358/2026

கௌரவ டபிள்யூ.எச்.எம். தர்மசேன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2026 யூலை 31 ஆம் திகதியளவில் ‘அஸ்வெசும’ நலன்புரிப் பயனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பதாரர்களின் தகவல்களை இற்றைப்படுத்தும் செயன்முறையை பூர்த்தி செய்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கையும் அதனைப் பூர்த்தி செய்யாத காரணத்தால் நலன்புரிப் பயன்களை இழந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கையும் மாவட்ட வாரியாக வேவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தகுதிப் பட்டியலின் இரண்டாம் கட்டம் தொடர்பாகக் கிடைக்கப்பெற்றுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளின் எண்ணிக்கையும், அவற்றுள் விசாரணை செய்து நிறைவு செய்யப்பட்டவற்றின் எண்ணிக்கையும், முதலில் எடுக்கப்பட்ட தீர்மானம் திருத்தப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையும் வேவ்வேறாக யாதென்பதையும்;

(iv) பிழையான தரவுகள் காரணமாக தகைமையற்ற குடும்பங்கள் நலன்புரிப் பயன்களைப் பெற்றுள்ளதென மற்றும் தகைமையுடைய குடும்பங்கள் நலன்புரிப் பயன்களை இழந்துள்ளதென அடையாளம் காணப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) தகைமையற்ற குடும்பங்களுக்கு நலன்புரிப் பயன்களை வழங்கியதன் காரணமாக அரச நிதியில் ஏற்பட்ட இழப்பு யாதென்பதையும்;

(vi) தற்போதைய அளவுகோல்களைத் திருத்தம் செய்து புதிய அளவுகோல்களின் கீழ் பயனாளர்களைத் தெரிவு செய்வது தொடர்பில் அரசாங்க நிதி பற்றிய குழு வழங்கிய அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்துதல் பற்றிய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஒக்தோபர் 22, வியாழக்கிழமை)**

2335/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் உள்ளக நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள கட்டில்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2025 ஆம் ஆண்டில் மேற்படி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்ற வெளிநோயாளர்கள் மற்றும் உள்ளக நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வாண்டில் இராஜகிரிய ஆயுர்வேத வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) அரச பல்கலைக்கழகமொன்றில் ஆயுர்வேத மருத்துவப் பட்டத்தைப் பெறும் பட்டதாரி ஒருவருக்கு அரசாங்கத் தொழிலொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் பிணைந்துள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், ஏன் என்பதையும்;

(iii) இன்றளவில் உள்ள வேலையற்ற ஆயுர்வேத மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2336/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் யாவர் என்பதையும்;

(ii) அதன் நியதிச்சட்ட முறையான பொறுப்புக்கள் யாவையென்பதையும்;

(iii) ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்காக 2025-2026 நிதியாண்டிற்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2026 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் யாவையென்பதையும்;

(ii) கடந்த 02 வருட காலப்பகுதியில் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2337/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆயுர்வேத சத்திரசிகிச்சைப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் உள்ளபோதிலும், அரசாங்க ஆயுர்வேத வைத்தியசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இராஜகிரிய ஆயுர்வேத வைத்தியசாலையில் தற்போது மகப்பேற்று நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வைத்தியசாலையில் இறுதியாக மகப்பேற்று நடவடிக்கை இடம்பெற்ற திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலையில் முதிர்வுறா சிசு பராமரிப்புப் பிரிவொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(iv) தற்போது மகப்பேறு இடம்பெறாவிட்டால், அப்பிரிவைத் தொடர்ந்து நடத்திச் செல்வதற்கான தேவைப்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஆயுர்வேத வைத்தியசாலைகளில் இருதய நோய்கள், உயர் குருதி அழுத்தம், தீக்காயங்கள், குடல்வளரி அழற்சி, புற்றுநோய், பாம்புக்கடி விசம், ஏனைய நச்சுப்பொருட்கள் உடலில் சேருதல் மற்றும் ஏனைய அவசர நோய் நிலைமைகளுக்கு பயன்படுத்தக்கூடிய அவசர மருத்துவ சிகிச்சைகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஒக்தோபர் 23, வெள்ளிக்கிழமை)**

2390/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, சிரம வாசனா நிதிய சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள சிரம வாசனா நிதியத்தை 2026.06.30ஆம் திகதியளவில் கலைத்து, மூடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நிதியத்தைக் கலைப்பதற்கான காரணங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தக நோக்கமற்ற நிறுவனங்கள் தொடர்பான மீளாய்வுக் குழுவால் இதற்காக முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் யாவை என்பதையும்;

(iii) நிதியத்தை கலைத்து மூடிவிடுவதற்காக நியமிக்கப்பட்ட கலைப்பாளர் அல்லது கலைப்பாளர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) நிதியத்தை கலைத்து முடிக்கும் விடயத்தின் தற்போதைய முன்னேற்றம், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுத் திட்டம் மற்றும் அப்பணிகளை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2391/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘சிரம வாசனா நிதியம்’ கலைக்கப்படும் திகதியளவில் அதன் வங்கிக் கணக்குகள், நிலையான வைப்புகள், அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், கிடைக்க வேண்டிய தொகை மற்றும் செலுத்த வேண்டிய பொறுப்புகளின் பெறுமதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) நிதியம் கலைக்கப்பட்ட பின்னர் மீதமாகும் தொகையும் சொத்துக்களும் கைமாற்றப்படுகின்ற அமைச்சு, திணைக்களம் அல்லது நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அவ்வாறு கைமாற்றப்படுகின்ற தொகைகளும் சொத்துக்களும் தொழிலாளர் நலன்புரி நடவடிக்கைகளுக்கு மட்டும் பயன்படுத்தப்படும் என்பதை உறுதிசெய்வதற்காக எடுக்கப்படும் சட்ட மற்றும் நிதிசார் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) நிதியத்தின் இறுதிக் கணக்குகளும் கலைப்பாளரின் அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2392/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘சிரம வாசனா நிதியம்’ கலைக்கப்பட்ட திகதியளவில் மருத்துவ உதவிகள், சட்ட உதவிகள், புலமைப் பரிசில்கள், மரண நன்கொடைகள், அனர்த்த நிவாரணங்கள், தொழிற்பயிற்சி மற்றும் ஏனைய உதவிகளுக்காக எஞ்சியிருந்த விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை, உதவியின் வகை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் செயலாற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்ற நிறுவனம் யாதென்பதையும்;

(iii) ஏற்கனவே, விண்ணப்பித்துள்ள நபர்கள் விண்ணப்பித்த திகதியும், முன்னுரிமை ஒழுங்குவரிசையும் பாதுகாக்கப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2021 தொடக்கம் 2026 வரையான காலப்பகுதியினுள் —

(i) நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட, நிராகரிக்கப்பட்ட மற்றும் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக எஞ்சியுள்ள விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த நிதியுதவியின் அளவு யாதென்பதையும்;

வருடம், மாவட்டம், உதவியின் வகை ஆகியவற்றின் அடிப்படையில் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி காலப்பகுதியினுள் வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்கள், வழங்கப்பட்ட நன்மைகளின் எண்ணிக்கை ஆகியவை தேசிய மட்டத்தில் கிடைக்கப்பெற்ற மற்றும் வழங்கப்பட்ட மொத்த எண்ணிக்கையின் சதவீதமாக யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, நவம்பர் 03, செவ்வாய்க்கிழமை)**

2452/2026

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2020.01.01 ஆம் திகதி முதல் 2026.06.30 ஆம் திகதி வரை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினாலும் அதனுடன் இணைந்த நிறுவனங்களினாலும் வெளிநாட்டுக் கடன் அல்லது அன்பளிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற ஒவ்வொரு கருத்திட்டம் தொடர்பாகவும் —

(i) கருத்திட்டத்தின் பெயர் மற்றும் கடன் வழங்கும் நிறுவனத்தின் கருத்திட்ட இலக்கம்;

(ii) நிதி வழங்கும் வெளிநாட்டு நிறுவனம் அல்லது அரசு;

(iii) உரிய ஒப்பந்த இலக்கங்கள், கைச்சாத்திடப்பட்ட திகதிகள் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதிகள்;

(iv) மொத்தச் செலவு, வெளிநாட்டு நிதியின் அளவு மற்றும் அரசாங்க நிதி ஒதுக்கீட்டின் அளவு;

(v) உரிய வட்டி வீதம், சலுகைக் காலம் மற்றும் மீளச் செலுத்தும் காலம்;

வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2026 ஜூன் 30 ஆம் திகதியன்று ஒவ்வொரு கருத்திட்டம் தொடர்பாகவும் —

(i) ஒதுக்கப்பட்ட தொகையில் செலவிடப்பட்டுள்ள தொகை மற்றும் அதன் சதவீதம்;

(ii) பௌதீக முன்னேற்றம் சதவீதமாக;

(iii) மூலத்திட்டத்தின்படி எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்திற்கும் உண்மையான முன்னேற்றத்திற்கும் இடையிலான வித்தியாசம்;

(iv) ஏற்பட்டுள்ள தாமதம்;

வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2453/2026

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் வெளியிடப்பட்ட பாடநூல்கள் மற்றும் பாட மொடியூல்களை அச்சிடுவதற்காக வெளிநாட்டு நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கருத்திட்டத்தின் பெயர் மற்றும் நிதியளிக்கும் நிறுவனம் அல்லது அரசு யாதென்பதையும்;

(iii) மேற்படி நிதி கடனாக அல்லது அன்பளிப்பாக பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) கருத்திட்டக் காலப்பகுதி மற்றும் அச்சிடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதித் தொகை யாதென்பதையும்;

(v) 2026.06.30 ஆம் திகதியளவில் அத்தொகையிலிருந்து செலவிடப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பிழைகள் காரணமாக விநியோகத்தை நிறுத்த வேண்டிய அல்லது அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை, தரம், பாடம் மற்றும் மொழிமூலம் ஆகியவற்றின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்பு யாதென்பதையும்;

(iii) மீள அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை, அதற்காக செலவிடப்பட்ட நிதித் தொகை மற்றும் அந்நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட மூலம் யாதென்பதையும்;

(iv) இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவுகள் யாவையென்பதையும்;

(v) பொறுப்பான தரப்பினரிடமிருந்து அவ்விழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2454/2026

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் உள்ளக விளையாட்டரங்கின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடுகள் யாதென்பதையும்;

(iv) ஒப்பந்தம் வழங்கப்பட்ட முறை யாதென்பதையும்;

(v) நிர்மாணப் பணிகள் வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் யாரென்பதையும்;

(vi) மேற்படி ஒப்பந்தத்திற்கான ஒப்பந்தத் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காக இதுவரை செலவிடப்பட்ட தொகை மற்றும் அதன் பௌதிக முன்னேற்றம் சதவீத அடிப்படையில் யாதென்பதையும்;

(ii) மதிப்பீட்டுத் தொகையை விஞ்சி செலவு செய்யப்பட்டுள்ளதாயின், அவ்வகையில் செலவு செய்யப்பட்ட தொகை மற்றும் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) 2026ஆம் ஆண்டிற்குத் தேவையான எஞ்சிய நிதி ஒதுக்கீடுகள் மற்றும் கருத்திட்டத்தை முழுமையாக நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) வருடாந்த பராமரிப்பு மற்றும் செயற்பாட்டுச் செலவாக மதிப்பிடப்பட்டுள்ள தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, நவம்பர் 04, புதன்கிழமை)**

2455/2026

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பில் பின்னாய்வுப் பொறிமுறையொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்;

(iii) 2026 ஆம் ஆண்டில் சம்பளங்கள் மற்றும் ஏனைய நிருவாக நடவடிக்கை களுக்காகவும், வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) வலுவூட்டப்பட்ட குடும்பமொன்றை 'வறுமையிலிருந்து விடுபட்ட குடும்பம்' என அடையாளம் காண்பதற்குப் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் அல்லது அளவீட்டுக் குறிகாட்டிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 நவம்பர் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

34/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிதியத்திற்கு நிதிகள் கிடைக்கும் மூலங்கள் யாவை என்பதையும்;

(iii) நிதியத்தின் சொத்துக்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தினால் ஆதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பின், அது பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஆதனங்கள் அல்லது முதலீட்டின் மூலமாக நிதியத்தின் நிதி ரீதியான பலம் அல்லது வருமான மட்டம் வளர்ச்சியடைந்திருப்பின், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

164/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி தொடர்பில் அர்ஜுன மகேந்திரன் என்பவருக்கெதிராகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) மேற்படி விடயம் தொடர்பாக அவருக்கு எதிராக இந்நாட்டின் நீதிமன்றங்களினால் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி அறிவித்தல்கள் விடுக்கப்பட்ட திகதிகளும் அவற்றை விடுத்த நீதிமன்றங்களின் பெயர்களும் யாவையென்பதையும்;

(iv) இதுவரை அவரை இந்நாட்டுக்கு அழைத்துவர முடியாமற்போனமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) அவரை இந்நாட்டுக்கு அழைத்து வருவதற்காகச் சம்பந்தப்பட்ட அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

688/2025

கௌரவ ரோஹண பண்டார,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அஸ்வெசும நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக 2024ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பங்களுள் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பிரதேச செயலகங்களில் இன்றளவில் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி விண்ணப்பங்களை உரிய முறையில் மதிப்பீடு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

989/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புலம்பெயர் பணியாளர்களுக்காக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்யும் விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன்கீழ் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவ்வேலைத்திட்டத்திற்காக பின்பற்றப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அளவுகோல்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது முறைகேடுகள் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாகக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் சம்பந்தமாக விசாரணையொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்காகப் பொறுப்புக்கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2045/2026

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மொத்த மின்னுற்பத்தியில் ஒவ்வொரு மின்னுற்பத்தி முறைமை களின் பங்களிப்பு சதவீத அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) கூடுதலான கிரயத்தையுடைய மற்றும் குறைந்த கிரயத்தையுடைய மின்னுற்பத்தி முறைமைகள் யாவை என்பதையும்;

(iii) மின்னுற்பத்தி முறைமைகளில் காணப்படும் கூடுதலான கிரயப்போக்கினை குறைப்பதற்கான திட்டங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2025ஆம் ஆண்டு தொடக்கம் இதுரையில் மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மின்கட்டணத் திருத்தம் காரணமாக வீட்டுப் பாவனையாளர்களுக்கு செலுத்தவேண்டி ஏற்பட்ட மேலதிகக் கட்டணம் சராசரியாக எவ்வளவு என்பதையும்;

(iii) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான நிவாரண வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2327/2026

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பேருந்துகளில் சொகுசு பேருந்துகள், அரை சொகுசு பேருந்துகள் மற்றும் சாதாரண பேருந்துகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2026 ஆம் ஆண்டில் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட மெட்ரோ பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளின் எண்ணிக்கை மாகாண வாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள தனியார் பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் ஏனைய தொடர்புடைய சேவைகள் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வருடாந்தம் ஈட்டிவரும் வருமானம் அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2354/2026

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் இதுவரையில் அதன் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்பட்ட மற்றும் செலவு செய்யப்பட்ட நிதித்தொகைகள், மேற்கொள்ளப்பட்ட பணிகள், பயன்படுத்தப்படாத ஒதுக்கீட்டுத் தொகை ஆகியன ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சேதமடைந்த நிலையிலுள்ள மாணவர் விடுதிகள், கல்வியியற் கல்லூரியின் கட்டடங்கள் மற்றும் சீர்குலைந்துள்ள விளையாட்டு மைதானம் ஆகியவற்றை புனரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றேல், நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கல்வி மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதியிரின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) அமைச்சின் உத்தியோகத்தர்கள் அண்மையில் கல்வியியற் கல்லூரியை மேற்பார்வை செய்துள்ளனரா என்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் மேற்பார்வை செய்யப்படுமா என்பதையும்;

(iv) மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2403/2026

கௌரவ திலிண சமரகோன்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹபரண, மின்னேரியா மற்றும் கவுடுல்ல பிரதேசங்களில் செயற்படும் பூங்காக்கள் மற்றும் அவற்றை நிர்வாகம் செய்கின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) 2026 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை குறித்த பூங்காக்களைப் பார்வையிட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் ஈட்டிக்கொண்ட வருமானம் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மின்னேரிய தேசிய வனப்பூங்காவிற்கு வருகை தருகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவுச்சீட்டு வழங்குகின்ற முறைமை யாது என்பதையும்;

(ii) குறித்த நுழைவுச்சீட்டுக்களை வழங்குவதிலும் சுற்றுலாப் பயணிகளைப் பூங்காவிற்குள் அனுமதிக்கும் முறைமையிலும் பலவீனங்கள் காணப்படுவதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iii) குறித்த வனப்பூங்காவில் காணப்படுகின்ற மிருகவியல் நூதனசாலை தற்போது செயற்பாட்டில் உள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) நாளாந்தம் வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்குப் போதுமானளவு சுகாதார வசதிகள் உள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அங்குள்ள மலசல கூடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2471/2026

கௌரவ ஆர்.எம்.ரஞ்சித் மத்தும பண்டார,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) போதைப்பொருள் குற்றச்சாட்டுகளின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள், தண்டனை அனுபவிக்கும் கைதிகள் மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள் ஆகியோரின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) கைதிகளின் உணவு, பானங்கள் மற்றும் ஏனைய வசதிகளுக்ககாக நாளொன்றுக்குச் செலவாகின்ற பணத்தொகை யாதென்பதையும்;

(iii) சிறிய குற்றங்களுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபர்களுக்குப் பிணை வழங்கும் நிபந்தனைகளைத் தளர்த்துவதற்கு அல்லது மாற்றுத் தண்டனை முறைகளை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (ii) சிறைச்சாலைத் திணைக்களத்தில் தற்போதுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு, சேவை வசதிகள் மற்றும் தொழிற் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) கைதிகளின் சுகாதார, துப்புரவேற்பாட்டு மற்றும் போசாக்கு நிலைமையை மேம்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) கைதிகளுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கும் அவர்களை சமூகமயப்படுத்துவதற்கும் அமுலிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2506/2026

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அறுவடை முகாமைத்துவத்திற்கான முறையான பொருளாதார மத்திய நிலையமொன்று இன்மையால் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் எதிர்நோக்கும் பொருளாதார ரீதியான நட்டம் தொடர்பில் அமைச்சிடம் தரவு அறிக்கைகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) பெருமளவில் அறுவடை செய்யப்படும் காலப்பகுதிகளில் இப்பிரதேசங்களில் களஞ்சிய வசதிகள் இன்மையால் உணவு வீண்விரயம் ஏற்படுவதுடன், அது தேசிய உணவுப் பாதுகாப்பை நேரடியாகப் பாதிக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) புத்தளம் மாவட்டத்தை மையமாகக் கொண்டு நவீன வசதிகளுடன் கூடிய பொருளாதார மத்திய நிலையமொன்றை நிறுவுவதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்வாறான பொருளாதார மத்திய நிலையமொன்றின் மூலம் அறுவடை வீண்விரயத்தை குறைப்பதற்கும் மேலதிக அறுவடைகளை பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதற்கும் உள்ள திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) அத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீட்டின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 நவம்பர் 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

202/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் புகையிரதங்களில் மோதி உயிரிழந்த யானைகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வெறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி விபத்துக்கள் இடம்பெற்ற இடங்கள் யாவையென்பதையும்;

(iii) புகையிரதங்களில் மோதி யானைகள் உயிரிழப்பதைத் தடுப்பதற்கான நிரந்தரத் தீர்வொன்றை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

373/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறைச் சிறைச்சாலையில் தற்பொழுது தடுத்து வைக்கப்பட்டுள்ள விளக்கமறியல் சிறைக் கைதிகளின் எண்ணிக்கை மற்றும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட சிறைக் கைதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சிறைச்சாலையில் தடுத்து வைக்கக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட சிறைக் கைதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) சிறைச்சாலையில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையும் விஞ்சியதாக சிறைக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iv) சிறைச்சாலையினுள் கடுமையான வகையில் துப்புரவற்ற நிலைமை நிலவுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(v) மேற்படி சிறைச்சாலையைச் சுகாதாரப் பாதுகாப்புமிக்கதும் துப்புரவானதுமான இடமாக மாற்றியமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

477/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றுவரை சிறிலங்கன் விமானசேவையினால் இயக்கப்படும் மொத்த விமானத் தொகுதியிலுள்ள விமானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய விமானங்கள் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றுவரை உள்ள நிரந்தர மற்றும் அமைய ஊழியர்களின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்;

(ii) கடந்த 5 ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தச் சம்பளம் மற்றும் ஊதியக் கொடுப்பனவுகளை வெவ்வேறாகவும்;

(iii) தற்போது ஒரு விமானத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையினையும் மேலும் இப்பிராந்தியத்திலுள்ள ஏனைய முன்னணி விமானச் சேவைகளுடன் இந்த விகிதாசாரத்தின் ஒப்பீட்டினையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சிறிலங்கன் விமானசேவையின் துணை நிறுவனங்களையும்;

(ii) அந்தத் துணை நிறுவனங்கள் ஒவ்வொன்றும் கூட்டிணைக்கப்பட்ட திகதிகளையும்;

(iii) ஒவ்வொரு துணை நிறுவனத்தினாலும் முன் கொண்டுவரப்பட்ட மொத்தத் திரட்டிய இலாபம் அல்லது நட்டத்தினை வெவ்வேறாகவும்;

(iv) குறித்த துணை நிறுவனங்களின் கடந்த 05 ஆண்டுகளுக்கான மொத்தப் புரள்வு, மொத்த இலாபம், தேறிய இலாபம், முதலீட்டின் மீதான இலாபம், நேரடி வரிகள், மற்றும் தேறிய ஐந்தொகைப் பெறுமதி ஆகியவற்றினை வெவ்வேறாகவும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

906/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் தற்பொழுது பதிவு செய்யப்பட்டுள்ள முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் (முன்பள்ளிகள்) எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி முன்பள்ளிகளில் சேவையில் ஈடுபடும் ஆசிரியைகள் பூர்த்திசெய்திருக்க வேண்டிய ஆகக்குறைந்த கல்வித் தகைமை யாதென்பதையும்;

(iii) தற்பொழுது சேவையில் ஈடுபடும் முன்பள்ளி ஆசிரியைகளுள் ஆகக்குறைந்த கல்வித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள ஆசிரியைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அனைத்து முன்பள்ளிகளுக்கும் ஒரே பாடத்திட்டம் அல்லது அதற்கு இணையான வழிகாட்டுதல் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) முன்பள்ளி ஆசிரியைகளுக்கு அரசாங்கத்தினால் நிரந்தர சம்பளமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

920/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025 பெப்ரவரி மாதம் இந்தியாவில் நடைபெற்ற "பிம்ஸ்டெக் இளைஞர் மாநாடு" நிமித்தம் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்ற குழுவில் இடம்பெற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(iii) மாநாடு நடைபெற்ற கால எல்லை யாதென்பதையும்;

(iv) மேற்படி குழு, இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்ற மற்றும் மீண்டும் நாடு திரும்பிய திகதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி மாநாடு நடத்தப்படுவதன் நோக்கங்கள் யாவை என்பதையும்

(vi) அந்த மாநாட்டில் பங்கேற்ற இலங்கையின் குழுவுக்காக, அரசாங்கத்தால் செலவிடப்பட்ட மொத்த நிதித் தொகை யாதென்பதையும்;

(vii) அத்தொகை செலவான விதத்தை விரிவாகக் குறிப்பிட முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1157/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சிற்கு தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றமை தொடர்பில், சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலமாக அல்லது வேறேதேனும் வழியில் அறிவிக்கும் நடைமுறையொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) கோரப்படும் தகவல்களை மேற்படி சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கோரப்படும் தகவல்கள் வழங்கப்படுவதை நிராகரிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வழங்கப்படும் தகவல்களுக்காக கட்டணமெதுவும் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கட்டண அறவீட்டின் அடிப்படை மற்றும் நடைமுறை யாதென்பதையும்;

(iii) மேற்படி கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1670/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கக்கூடிய கைதிகளின் அதிகபட்ச எண்ணிக்கை யாது;

(ii) தற்போது சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மொத்தக் கைதிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி எண்ணிக்கை ஆண்கள் மற்றும் பெண்களின் அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(iv) சிறைச்சாலைகளில் காணப்படும் நெரிசலைக் குறைப்பதற்காக அரசாங்கத்தினால் தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) மேற்படி நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீதிமன்ற வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளில், விளக்கமறியலில் இருந்த காலப்பகுதியில் உயர்நீதிமன்றங்களுக்கு மேன்முறையீடுகளை முன்வைத்துள்ள கைதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) 2024 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் மூலம் விளக்கமறியல் காலத்தினை தண்டனை காலத்துடன் கணக்கிடுதல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள நிவாரணம் 2024 மே 03ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுவதால், அத்திகதிக்கு முன்னர் அத்தகைய நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதிபெற்ற கைதிகளின் எண்ணிக்கை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1983/2026

கௌரவ லால் பிரேமநாத்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய கிழக்கு நெருக்கடி காரணமாகக் கப்பல் காப்புறுதிக் கட்டணங்கள் சுமார் 20%ஆல் அதிகரித்தமை மற்றும் செங்கடல் வழியான போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் காரணமாக இலங்கையைச் சேர்ந்த தேயிலை ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் பொருளாதாரச் செலவினங்களை முகாமைத்துவம் செய்ய அமைச்சு இடையீடு செய்யுமா என்பதையும்;

(ii) 'எண்ணெய்க்காகத் தேயிலை' கடன் திட்டம் முடிவுக்கு வருவதைத் தொடர்ந்து, ஈரான் போன்ற பிரதான கொள்வனவாளர்களுக்குத் தேயிலையை விற்பனை செய்யும்போது ஏற்பட்டுள்ள கொடுப்பனவுச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாற்று வங்கி வழிமுறைகள் யாவை என்பதையும்;

(iii) ஒரு கிலோகிராம் தேயிலையின் உற்பத்திச் செலவு 1,000 ரூபாயைத் தாண்டியுள்ள நிலையில், ஏல விலையில் ஏற்படும் ஸ்திரமற்ற தன்மையிலிருந்து சிறு தோட்ட உரிமையாளர்களைப் பாதுகாப்பதற்காக உத்தேச வட்டிச் சலுகைக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாது என்பதையும்;

(iv) மத்திய கிழக்குச் சந்தை அபாயத்தைக் குறைப்பதற்காக, சீனா, ரஷ்யா மற்றும் முன்னாள் சோவியத் பிராந்திய நாடுகளை (CIS நாடுகள்) இலக்காகக் கொண்ட புதிய வர்த்தக உடன்படிக்கைகள் அல்லது நேரடிச் சந்தைப்படுத்தல் உத்திகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) தோட்டப் புறங்களை உள்ளடக்கியதாக 'தேயிலைச் சுற்றுலா வலயங்கள்' பிரகடனப்படுத்தப்படுவதன் மூலம் மேலதிக வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2400/2026

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் இதுவரை அடையாளங்காணப்பட்டுள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி இடங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இந்த தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி இடங்களைப் பாதுகாப்பதற்காக இவ்வாண்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி, ஒவ்வொரு இடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2516/2026

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025ஆம் ஆண்டில் 'தித்வா' அனர்த்த நிலைமையின்போது காணி உறுதிகள் இல்லாத காரணத்தினால் அல்லது சட்டவிரோதமாகக் குடியிருந்தமையால் சேதமடைந்த வீடுகளுக்கான இழப்பீடுகள் கிடைக்கப்பெறாதவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இதில் சட்டவிரோத வீடுகள் மற்றும் உறுதிகள் இல்லாத வீடுகள் என கண்டறிவதற்காக பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iii) அனர்த்தத்தின் பின்னர் வீடுகளைச் சுத்தம் செய்யும் பணிகளுக்காக ரூ.25,000 மற்றும் குடியேறுவதற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூ.50,000 வழங்கப்பட்ட போதிலும், சட்டவிரோத வீடுகள் மற்றும் உறுதிகள் இல்லாத வீடுகள் எனும் அடிப்படையில் சேதமடைந்த வீடுகளுக்கு இந்த இழப்பீடு வழங்கப்படாமைக்கு காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொலன்னாவைப் பிரதேச செயலகப் பிரிவின், 504A இலக்கமுடைய பெலகம கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள ஹங்சகம ஜன உதான கிராமத்திலுள்ள 52 வீடுகள் சட்டவிரோத வீடுகளாக அடையாளங்காணப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அந்த 52 வீடுகளில் சேதமடைந்த வீடுகளுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இழப்பீடுகள் வழங்கப்படாத வீடுகளுக்கு இழப்பீடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 4/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி ,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர் களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 5/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ 2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கம் தொடர்பில் ஊழியர்களுக்கு 1% வீத இலாபத்தைச் செலுத்துதல்,—அரசாங்கத் தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன வருடாந்தப் பணவீக்க வீதத்தினை விடக் குறைந்தபட்சம் 1% அதிகமான இலாபம் ஊழியர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயண வசதிகள் பெற்றுத்தரல்,— அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் இலவசப் பயண வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தும் தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— பல்வேறு திறன்களைக் கொண்ட புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களின் திறன்கள் மற்றும் படைப்புகளை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலதிபர்களுக்கு வரிச்சலுகை,— சர்வதேச சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் 75% க்கும் அதிகமான உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்குரிமையை வழங்குதல்,— வாக்குரிமையை இழந்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும், தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றும், இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை உருவாக்க உதவும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2025

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,— சமகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சம்பந்தமாக சமூகத்தில் பாரியதொரு சொல்லாடல் உருவாகியுள்ளதாலும், நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவின் போது குறித்தவொரு சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் வசம் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரம் இருப்பதால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெறும் நிறுவனமாக அது மாறியுள்ளதாலும், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தல்,— இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தைப் போன்றுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பாக மிக முக்கியமான சிபாரிசுகள் தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதனால் மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்த முறையான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் சேவைக்காக முறையாக நிதியைப் பயன்படுத்துதல்,— இன்றளவில் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியை உரிய முறையில் செலவிட்டு பொது மக்கள், சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது இலாபம் ஈட்டும் நோக்கில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிடுவதாக தகவல் அறியக்கிடைத்துள்ளமையால் இந்நிலையை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.49/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையானது முறையற்ற வகையில் காணப்படுவதால், அதனை முறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகள் பீடத்தினைத் தாபித்தல்,— ஆசிரியர்களுக்குச் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்காகத் தேசிய மொழிகள் பீடம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 53/2025

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் அக் கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல், — மக்களுக்கு கேளிக்கையை அளிக்கும் பிரதான கைத்தொழில் துறையாகிய தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்காகவும் ஒழுங்குறுகை நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 56/2025

கௌரவ உபுல் கித்சிறி,— உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— உடவளவை தேசியப் பூங்கா, உடவளவை யானைகள் சரணாலயம், சங்கபால ரஜமகா விகாரை, உடவளவை நீர்த்தேக்கம், செவனகல சீனித் தொழிற்சாலை, செவனகல கரும்பு ஆராய்ச்சி நிலையம், உடவளவை நன்னீர் மீன்பிடி நிலையம் மற்றும் வவுல்பன சுண்ணாம்புக்கல் குகை முதலிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்கள் காணப்பட்ட போதிலும், முறையான ஒரு வேலைத்திட்டம் இன்மையாலும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அவற்றின் பெறுமதியைக் கண்டுகளிக்க முடியாதிருப்பதாலும் இரத்தினபுரி மாவட்டத்தின் உடவளவை மற்றும் மொனராகலை மாவட்டத்தின் செவனகல ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.57/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— “இலங்கை பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசாரம், தொழில் மற்றும் இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்வாதாரத்தைப் பூர்த்திசெய்யத் தேவையான ஒரு நிதியம் தற்சமயம் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இல்லாமையினாலும், இவ்வாறான தேவைகளுக்காக “பைத்துல்மால்” என்ற பெயரிலான நிதியம் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நாடுகளில் பல ஆண்டுகாலமாக இயங்கிவருவதாலும், இலங்கையில் இவ்வாறானதொரு நிதியம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்குத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதாலும், முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் “இலங்கைப் பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 62/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— புகையிரதப் பண்டப் போக்குவரத்தினை வினைத்திறன்மிக்கதாக மாற்றுதல்,— இலங்கையில் புகையிரதச் சேவையானது பண்டப் போக்குவரத்தினை முக்கிய நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையாலும், இன்றளவில் புகையிரதச் சேவை அந்நோக்கத்திலிருந்து விலகியுள்ளமையாலும், பண்டங்களை புகையிரதத்தில் ஏற்றிச் செல்வது செலவு குறைந்த முறையாகக் காணப்படுவதனாலும், இதன் நன்மைகள் நாட்டு மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கப் பெறுவதனாலும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் புகையிரத்தின் மூலம் பண்டங்களையும், எரிபொருளையும் ஏற்றிச் செல்வதற்கு அரசாங்கம் உரிய வழிமுறையொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 63/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— தமது உற்பத்திகளை விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியை குறைத்தல்,— தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யும்போது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலையை நிர்ணயிப்பதால் இந்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாலும், இவ்வுற்பத்திகளை வர்த்தகர்களிடமிருந்து நுகர்வோர் கொள்வனவு செய்யும்போது கூடுதல் விலையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும், ஒரே நேரத்தில் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் அநீதி இழைக்கப்படுகின்ற இந்நடைமுறையை மாற்றியமைத்து விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயத்தை வழங்குவதற்காக அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 64/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— முன்பள்ளிக் கல்வியை ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்குதல்,— தற்போது இலங்கையில் அமுலில் உள்ள அனைத்து கல்வி வாய்ப்புகளிலும் முன்பள்ளிக் கல்வி மிக முக்கியமானதும், தீர்க்கமானதுமாக காணப்படுவதால், இலங்கையின் முன்பள்ளிக் கல்வியை ஒரு நிறுவனத்தினூடாக ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 65/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்,— ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு விவசாய மற்றும் வேறு பொருட்களை உற்பத்திச் செய்கின்ற உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிச் சந்தைக்குள் நுழைவதற்குப் போதுமானளவு வசதிகள், அறிவு மற்றும் நுழைவு வழிகள் இல்லாத காரணத்தினால், அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான அங்கங்களாகிய ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ள இளம் முயற்சியாளர்களுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 66/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— உயர்தரம் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத் துறைகளுக்கு இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்தல்,— இலங்கையின் பாடசாலைகளில் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பாடத் துறைகளில் உயர் கல்வி கற்கும் மாணவர்களின் இலக்கிய ரசனையை மேம்படுத்துவதற்காக குறித்த துறைகளுக்கு மேலதிகப் பாடமாக இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 67/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளை பராமரித்தல்,— வைத்தியசாலையொன்றில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளின் அருகிலிருந்து நாள்முழுவதும் அவர்களைப் பராமரிப்பதற்காக பொறுப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென விடுதிக்கு பொறுப்பான அலுவலர் தெரிவிப்பதாலும், அவ்வாறு பராமரிப்பாளர் ஒருவர் இல்லாதபோது கட்டணம் செலுத்தி பராமரிப்பாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதாலும், அத்தகைய பராமரிப்பாளர்கள் நாளொன்றுக்கு ரூ. 3,500 அறவிடுவதாலும், சில நாட்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப் பெறவேண்டிய நிலை ஏற்படின் அச்செலவு பெருஞ்சுமையாக இருக்கும் என்பதாலும், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் பாதுகாப்பினையும் மற்றும் பராமரிப்பினையும், வைத்தியசாலையில் சேவையாற்றும் பராமரிப்பாளர்கள் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கான வழிமுறை ஒன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 68/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— காணி உரிமப் பத்திரங்களையுடையோருக்கு, நிரந்தரக் காணி அறுதி உறுதிப் பத்திரங்களை வழங்குதல்,— நாட்டு மக்களில் கணிசமானோர் தமது காணிகளுக்கு உரிமப் பத்திரங்கள் அல்லது ஸ்வர்ண பூமி போன்ற உறுதிகளையே கொண்டிருக்கின்றனர் என்பதால் அவர்களுக்குரிய உறுதிகளை வழங்குவதற்கு சரியான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 71/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— நிலைபேறான இளைஞர் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் நிரந்தர விசேட பொருளாதார வலயம் ஒன்றினைத் தாபித்தல்,— ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயமொன்றினைத் தாபித்தலானது அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவதனாலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை ஈர்ப்பதனாலும் இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பினை உருவாக்குவதனாலும், அவ்வாறான வலயங்களினைத் தாபிப்பதன் மூலம் அரசாங்கத்தினால் தொழிற்துறை விரிவாக்கத்தினை ஊக்குவிக்கவும், திறன் விருத்தியினை மேம்படுத்தவும் மற்றும் தொழில்முனைவினை ஊக்குவிக்கவும் முடியுமென்பதாலும், இதன்மூலம் வேலைவாய்ப்பின்மையினை நிவர்த்திசெய்து யாழ்ப்பாணத்திலும் வட மாகாணத்திலும் மற்றும் ஒட்டுமொத்த நாட்டிலும் நீண்டகால சமூக-பொருளாதார முன்னேற்றத்தினை ஊக்குவிக்க முடியும் என்பதாலும், நாடு முழுவதிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களினை உள்ளடக்கி, யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயம் (SEZ) தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 73/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்குச் சுகாதாரத்திற்கான மிகச் சிறந்த வாய்ப்புகளை வழங்குதல்,— சனத்தொகையில் பெரும்பான்மையானோர் திறந்த இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படுகின்ற நிலையில், தனியார் துறை ஊழியர்களுக்கு 'ஊழியர் சேமலாப நிதியம்' மற்றும் 'ஊழியர் நம்பிக்கை நிதியம்' ஆகியவற்றுக்கூடாக இலவச வசதிகள் வழங்கப்படும் வகையிலும் அரசாங்க ஊழியர்களுக்கு அல்லது ஊழியரல்லாதோருக்கு அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தில் இருந்து செலவுக்கான முழுத் தொகையும் வழங்கப்படும் வகையிலும் அனைத்து இலங்கையர்களுக்கும் சுகாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாரளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.74/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாரத்தின் கடமை நாட்களில் பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை துரிதமாக நடைமுறைப்படுத்தல்,— பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக, காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தை இற்றைப்படுத்தல்,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையர்களுக்கு ஏராளமான நன்மைகள் கிடைப்பதனால், அந்த ஒப்பந்தத்தை மீண்டும் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— சூட்டிகை வலுசக்திக் கட்டமைப்பையும் சூட்டிகை மின் மானிகளையும் அறிமுகம் செய்தல்,— ஒரு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வடிவமாக சூரிய மின்சக்தி பெறப்படுவதை ஊக்குவித்தல் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றபோதும் குறிப்பாக, கூரைகளில் பொருத்தப்படுகின்ற சூரியப் படல்களால் பிறப்பிக்கப்படுகின்ற மின்சாரத்தின் அளவை முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தால் வேறுபடுத்திக் கண்டறிய முடியாததால் தேசிய மின்சாரக் கட்டமைப்பை (Grid) சூட்டிகை நிலைக்கு (Smart Grid) கொண்டு வரவும் சூட்டிகை மின் மானிகளை (Smart Meters) அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.77/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— உணவுகளை சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தீங்கு விளைவிக்கும் செயற்கைச் சுவையூட்டிகளைத் தடைசெய்தல்,— இந்த நாட்டிலுள்ள உணவகங்கள் மற்றும் ஹோட்டல்களில் ரைஸ், கொத்து மற்றும் நூடில்ஸ் போன்ற உணவுகளைச் சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் செயற்கை சுவையூட்டிகள் பல்வேறுபட்ட தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றதென கூறப்படுவதால் அது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் ஊடாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, மேற்படி தீங்கு விளைவிக்கும் சுவையூட்டிகளைத் தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— நீர்த்தாமரை செடியின் பரவலை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழித்தல்,— நீர்த்தாமரை அல்லது Eichhornia crassipes (Mart.) Solms என்ற அறிவியல் பெயர்கொண்டு அழைக்கப்படும் ஆக்கிரமிப்புத் தாவரம், தற்போது விவசாய நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் முழுவதுமாக பரவிச் சென்றுள்ளதாலும், இதன் துரித வளர்ச்சி வேகத்தின் காரணமாக உள்நாட்டுத் தாவரங்களையும் விஞ்சி உயிரியல் சூழல் தொகுதிக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளதாலும், இதன் விளைவாக வண்டல் மண் படிந்து நீர் வழிப் பாதைகள் மற்றும் நீர் வழிந்தோடல் என்பன தடைப்படுவதனூடாக வெள்ளப் பெருக்கு நிலைமைகள் ஏற்படுவதாலும், அன்றாட பாவனைக்கு அவசியமான நீரின் தரம் மாசடைவதாலும் நீர் மின்னுற்பத்திக்கு தடையாக அமைந்துள்ளதாலும், இரசாயன களைக்கொல்லிப் பயன்பாட்டினூடாக அவற்றை அழித்தல், அந்நீரைப் பயன்படுத்தும் நபர்களுக்கு சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்துவதாலும், இதன் விளைவாக ஏற்படும் நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்தின் காரணமாக யானைக்கால் நோய் மற்றும் டெங்கு நோய் போன்றவை பரவி வருவதாலும், இத்தாவரத்தை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழிப்பதனூடாக நிலையான தீர்வினை வழங்கும் பொருட்டு அரசாங்கத்தினால் அதற்கேதுவான கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் காலோசிதமானதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான அளவுகோலாக பிரதான செயலாற்றுகைச் சுட்டியை பயன்படுத்துவதற்கான வழிமுறையை தயாரித்தல்,— அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களை நியமிப்பதில் மூப்புரிமையை கவனத்திற்கொள்வது போன்றே அவர்களின் பிரதான செயலாற்றுகைச் சுட்டியை (KPI - Key Performance Indicator) ஒரு அளவுகோலாகப் பயன்படுத்துவதற்கான வழிமுறையொன்றை அரச சேவையில் பயன்பாட்டிற்கு கொண்டுவந்து அதற்கேற்ப நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது பிரதான செயலாற்றுகைச் சுட்டியைக் கவனத்திற் கொள்ளுதல்,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் முக்கிய செயலாற்றுகைச் சுட்டியை (KPI -Key Performance Indicator ) வருடாந்தம் மதிப்பாய்வு செய்து அவர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது அத்தகைய சுட்டிகளைப் கவனத்திற் கொண்டு பதவிகளை வழங்கும் முறையியலொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களை வேறு பதவிகளுக்கு நியமிக்கும்போது அவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்தல்,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்கள் அப்பதவிகளை வகித்த காலம் நிறைவடைந்த நாளிலிருந்து குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு அரச சேவை, நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், நியாய சபைகள் அல்லது வெளிநாட்டு சேவை (தூதுவர்கள் போன்ற) ஆகியவற்றின் பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்குரித்தான சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப் பத்திரங்களை தமது கட்சியின் நிதியத்தில் வைப்பிலிடுவதை நிறுத்துதல்,— அரசியல் கட்சிகள் தமது கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை அத்தகைய அரசியல் கட்சிகளுக்கே மீளப் பெற்றுக்கொள்வதானது மக்கள் பிரதிநிதிகள் தங்களது சுயாதீனதன்மையை இழக்கின்றதொரு செயற்பாடாகும் என்பதாலும், இது சனநாயகத்திற்கு கடும் சவாலாக கருதப்படுவதனாலும், இவ்வாறு அரசியல் கட்சிகளினால் மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை தமது நிதியத்தில் வைப்பிலிடுதல் கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் புனர்வாழ்வளிக்கும் நிலையத்தைத் தாபித்தல்,— இன்றளவில் ஹெரோயின் போன்ற போதைப் பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு காணப்படுவதாலும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் குறித்த ஒரு பிரதேசத்தில் மாத்திரமன்றி நாடெங்கிலும் பரந்து காணப்படுவதாலும் இவர்களின் ஊடாக இவ்விடயம் மேலும் பரவி வருவதாலும், போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையங்கள் நாட்டின் ஒருசில பிரதேசங்களில் மாத்திரம் காணப்படுவதானது போதைப் பொருள் பாவனையாளர்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது பாரிய பிரச்சினையாக மாறியிருப்பதாலும், அதற்கு தீர்வினை வழங்கும் பொருட்டு குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு புனர்வாழ்வளிப்பு நிலையமேனும் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையின் விவசாய நிலங்களை மிகவும் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துதல்,— இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியத்துவமிக்க ஒரு துறையாக விவசாயத் துறை காணப்படுவதனாலும், விவசாய நிலங்களில் சுமார் 40 %மாத்திரம் வருடாந்த உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தப்படுவதனாலும், எஞ்சிய நிலங்கள் உரிய முறையில் திட்டமிடப்படாமை, நீர் வளப் பற்றாக்குறை, தொழிநுட்ப அறிவின்மை மற்றும் நவீனமயப்படுத்தப்படாமை ஆகியன காரணமாக பயன்படுத்தப் படாமையினாலும் உற்பத்திகளின் அளவு குறைவடைவதனால் வருடாந்தம் உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது பாரிய பணத்தொகை செலவிடப்படுவதனாலும், விவசாய உற்பத்திகளின் வளர்ச்சியை எதிர்வரும் ஒரு சில வருடங்களில் 30% இனால் அதிகரிப்பதற்கும், இதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், வணிக விவசாயத்தின் பரவலாக்கத்தை அதிகரிப்பதற்கும் வழிசமைக்கும் வகையில் சகல விவசாய நிலங்களையும் ஆய்வு செய்து நிலத்தின் வகை, பயிர்களுக்கு உகந்தநிலை, நீர் மற்றும் பயிர்ச்செய்கை பற்றிய தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை தரவுத் தொகுப்பொன்றை அமைப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குமாக நிலங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள தீவுகளில் வாழும் மக்களுக்கான கடற் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்,— யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பாகப் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் வாழும் மக்கள் பல தசாப்தங்களாகப் போதிய கடற் போக்குவரத்து வசதிகள் கிடைக்காதவர்களாக இருப்பதாலும், அதன் விளைவாக, அவர்கள் பல மணித்தியாலங்களைக் கடற் பயணத்தில் செலவிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதாலும், இவ்வாறான நிலைமையில் நோயாளிகள், கர்ப்பிணிகள், முதியவர்கள், பாடசாலைப் பணியாளர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி இப்பயணத்தின் போது பல அபாயநேர்வுகளை எதிர்கொள்வதாலும் "கிராமமொன்றின் அபிவிருத்தி என்பது ஒரு தேசத்தின் அபிவிருத்தியாகும்" என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை என்பதாலும் அம்மக்களுக்களுக்காக நவீன, பாதுகாப்பான, துரிதமான மற்றும் நம்பகமான கடற் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 91/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— தலைமன்னார் — ராமேஷ்வரம் படகுச் சேவையினை ஆரம்பித்தல்,— தலைமன்னார் - ராமேஷ்வரம் படகுச் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் குறிப்பாக இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிக்க முடியும் என்பதாலும், இதன் மூலம் பொதுமக்கள் குறைந்த செலவில் தமிழ்நாட்டுக்குப் பயணித்து, அமுலிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு நியாயமான விலைகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்து அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதை இது இயலுமாக்கும் என்பதாலும் தலைமன்னாருக்கும் ராமேஷ்வரத்திற்கும் இடையிலான படகுச் சேவையினை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 95/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்துதல்,— மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் பொருட்டு பின்பற்றப்படும் நடைமுறை பெருமளவு ஊழல் நிறைந்ததாக மாறியிருப்பதனால், அந்நிலைமையை தடுப்பதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'சூர்யபல சங்ராமய' கருத்திட்டத்தை மேம்படுத்துதல்,— இலங்கையில் செலவு குறைந்த மற்றும் சுற்றுச்சூழல் நேயமிக்க வலுசக்தி மூலாதாரமாக சூரிய மின்சக்தி அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், 2016.09.06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'சூர்யபல சங்ராமய' (Battle for Solar Energy) கருத்திட்டத்தின் மூலமாக தற்பொழுது 2000 இற்கும் அதிகமான மெகாவொட் சூரிய மின்சக்தி தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாலும், மின்சார அலகொன்றிற்கான விலையைக் குறைப்பதற்கான முறையியலாகவும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான மூலோபாயத் திட்டமாகவும், 'சூர்யபல சங்ராமய' கருத்திட்டத்தை மேலும் மேம்படுத்தி பாதுகாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'களுத்துறை கடற்கரை வலயத்தை' விசேட பொருளாதார வலயமாக மேம்படுத்தல்,— களுத்துறை நகரத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா வலயமொன்றை அபிவிருத்தி செய்வதற்காகவும், களுகங்கையின் கழிமுகத்தையும் கடற்கரையையும் பாதுகாக்கும் உத்தியாகவும், கெலிடோ கடற்கரை மற்றும் களுகங்கையின் கழிமுகம் மாறியதன் காரணமாக புதிதாக உருவாகியுள்ள மேட்டுநிலம் உட்பட 'களுத்துறை கடற்கரை வலயத்தை' விசேட பொருளாதார வலயமாக மேம்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— ‘மில்லனிய ஏற்றுமதி செயலாக்க வலயம்’ நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தல்,— களுத்துறை மாவட்டத்தில், ‘மில்லனிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தை’ (Millaniya Export Processing Zone) நிர்மாணிப்பதற்குத் தேவையான 240 ஏக்கர் காணி ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டுள்ளதாலும், அக்கருத்திட்டத்திற்காக அதிவேக நெடுஞ்சாலை நுழைவு வழிகள், குழாய் நீர் மற்றும் மின்சாரத்தை வழங்குவதற்காக அரசாங்கம் இன்றளவில் சுமார் ஒரு பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாலும், மேற்படி ஏற்றுமதி செயலாக்க வலயத்தை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட காணி மிகப் பொருத்தமானதென இலங்கை முதலீட்டுச் சபை இனங்கண்டுள்ளதாலும், அந்த ஏற்றுமதி செயலாக்க வலயத்தை நிர்மாணிப்பதனை அரசாங்கத்தின் முதன்மைக் கருத்திட்டமாகக் கருதி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— ஆங்கில மொழியில் இரண்டாம் நிலைக் கல்வி வழங்குவதை மேம்படுத்தல்,— அரசியலமைப்பின் 18(3) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 'ஆங்கில மொழி' இலங்கையின் இணைப்பு மொழியாக (Link Language) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாலும், சர்வதேச மொழியான 'ஆங்கில மொழி' குடிமக்களுக்கு அறிவைப் பெறுவதற்கான பிரதான மூலோபாயமாக அடையாளங் காணப்பட்டுள்ளதாலும், எந்தவொரு மொழியியல் அல்லது இனப் பாகுபாடும் இல்லாமல் ஒரு நாட்டில் வாழ்வதற்குத் தேவையான இணைப்பு மொழியாக ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவது இலங்கையின் அனைத்து குடிமக்களுக்கும் மிகவும் முக்கியமானதென்பதாலும், இலவசக் கல்வி எண்ணக்கருவின் கீழ் தோன்றிய இலங்கையின் மத்திய மகா வித்தியாலயக் கட்டமைப்பிற்குள்ளும் இன்னும் பல பாடசாலைகளிலும் ஆங்கிலத்தில் இரண்டாம் நிலைக் கல்வியை வழங்கும் முறையியல் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருவதாலும், இலங்கைக் குடிமக்கள் சர்வதேச வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு ஆங்கில மொழி மூலமாகக் கல்வி கற்பது மிகவும் முக்கியமானது என்பதாலும், இலங்கையிலுள்ள அனைத்து இரண்டாம் நிலைப் பாடசாலைகளிலும் (Secondary Schools), 'ஆங்கில மொழி' மூலம் (English Medium) கல்வியை வழங்க வேண்டுமெனவும் அதற்கெனப் போதுமானளவு முதலீட்டைச் செய்வதற்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை நிறுவுதல்,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைக்கான தேவைகளை நிவர்த்தி செய்யும் நவீன தொழில்நுட்ப பட்டதாரிகளை வழங்கும் பல்கலைக்கழகம் என்பதால், இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் நிர்மாணம், இயந்திரவியல், கைத்தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகள் உள்ளிட்ட உலகளாவிய தேவைகளையும் கருத்திற் கொண்டு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/2025

கௌரவ ரோஹண பண்டார,— நீச்சல் திறமைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்தல்,— நீரில் மூழ்கி உயிரிழக்கும் ஆட்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை அண்மைக் காலமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளதாலும், மிகச் சிறந்த நீர்ப்பாசன நாகரீகத்திற்கு உரிமைகூறும் பண்டைய கால மக்கள் மத்தியில் காணப்பட்ட நீச்சல் திறமைகளை, இன்றைய பரம்பரையினர் மத்தியிலும் மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.109/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவைத் தாபித்தல்,— வடக்கு கிழக்கில் சுமார் 26 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள், காணாமல்போதல் மற்றும் ஏனைய அழிவுகள் தொடர்பாக கண்டறிவதற்கும், தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல் மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய அடுத்தகட்ட நகர்வுகளை ஆராய்வதற்குமான செயன்முறைகளை வலுவூட்டுவதற்காகவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவொன்று (Truth Commission) தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.110/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— 15 வயதிற்கு குறைந்த சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்தும் சட்ட வழிமுறையை அறிமுகப்படுத்தல்,— மிகுதியான சமூக ஊடகப் பயன்பாடு காரணமாக சிறுவர்கள் மத்தியில் மன அழுத்தமும் மன உளைச்சலும் அதிகரித்தல், கல்விச் செயலாற்றுகையில் வீழ்ச்சி, இணையவழித் துன்புறுத்தல் (cyberbullying), நாகரிகமற்ற மற்றும் பாதுகாப்பற்ற உள்ளடக்கங்களை பார்க்க நேரிடுதல் போன்ற சிக்கல்கள் அதிகரித்து வருவதாலும், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், டென்மார்க் போன்ற வளர்ச்சி அடைந்துள்ள நாடுகள் சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை ஏற்கெனவே அறிமுகம் செய்துள்ளதாலும், சிறுவர்களின் உள ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் கல்விசார் வளர்ச்சியைப் பேணுவதற்காக சமூக ஊடக கணக்குகளைத் திறப்பதற்கான ஆகக்குறைந்த வயதாக 15 வயதை நிர்ணயித்தல், சமூக ஊடகக் கம்பனிகளுக்கு வயது மெய்யுறுதிப்படுத்தலை கட்டாயமாக்குதல், சட்டத்தை மீறுகின்ற நிறுவனங்கள் மீது அபராதம் விதித்தல் மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல், வயது வந்தவர்களின் கணக்குகளைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களை உசாவும் சிறுவர்கள் குறித்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற நகர்வுகளை முன்னெடுப்பதற்காக 15 வயதிலும் குறைந்த சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்தும் சட்ட ரீதியான வழிமுறையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 112/2026

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குதல்,— நீண்டகாலத் தன்னிச்சையான தடுத்துவைப்புகளை இயலுமாக்குவதற்கும் சித்திரவதைகள் மூலம் போலி வாக்குமூலங்களைப் பெறுவதற்கும் சிறுபான்மைச் சமூகங்களையும் சிவில் சமூகக் குழுக்களையும் இலக்கு வைப்பதற்கும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாலும், அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்படலாம் என்பதாலும், பயங்கரவாதம் தொடர்பான குற்றங்கள் ஏற்கனவே தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் வழக்குத் தொடரப்படக்கூடியவையாக இருப்பதாலும், பாரிய அதிகாரங்களைக் கொண்ட நிரந்தரமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்றுக்கான நியாயப்படுத்தல்கள் எவையும் இல்லையென்பதாலும், இதேபோன்ற ஏற்பாடுகளைக் கொண்ட எந்தவொரு பதிலீட்டுச் சட்டவாக்கத்தினையும் அறிமுகப்படுத்தாமல், 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கு இலங்கை அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 114/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலகச் சுற்றாடலைப் பாதுகாத்தல்,— உலகச் சுற்றாடலைப் பாதுகாப்பது தொடர்பில் இலங்கை அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும், குறிப்பாகப் புவி வெப்பமடைவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா. 115/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட வைப்பாளர்களின் நிதியை மீளச் செலுத்துதல்,— பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் நிதியை வைப்புச் செய்த பெருமளவிலான வைப்பாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளதால் அவ்வாறு அக்கம்பனிகளில் வைப்புச் செய்தவர்களுக்கு அந்த நிதியை மீளச் செலுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் இக்கம்பனிகளின் பாதுகாவலர் என்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கி இது தொடர்பில் அதிக கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா. 116/2026

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரச வைத்தியசாலைகள் கட்டமைப்பின் வெளிநோயாளர் பிரிவுகளில் நிலவுகின்ற நெருக்கடியைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— உலக சுகாதாரச் சுட்டிகளின் தரவரிசைப்படுத்தலில் எமது நாடு எந்த இடத்தில் காணப்பட்ட போதிலும், அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளில் காணப்படுகின்ற பாரிய நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 117/2026

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— யானை - மனித மோதல்கள் அதிகமாக இடம்பெறுகின்ற பிரதேசங்களில் தேனீ வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— புள்ளிவிபரத் தரவுகளுக்கமைவாக யானை – மனித மோதல்கள் அதிகமாகக் காணப்படுகின்ற ஒரு நாடாக இலங்கை தற்போது மாறியுள்ளதாலும், அதன் காரணமாக வருடாந்தம் அதிக எண்ணிக்கையிலான மனிதர்கள் மற்றும் யானைகள் உயிரிழப்பதாலும், சொத்துக்கள் உட்பட பௌதிக வளங்கள் அழிவடைவதாலும், இந் நிலைமையினைத் தடுப்பதற்கானதொரு முன்னோடிக் கருத்திட்டமாக கென்யா போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுவதைப் போன்று, யானை – மனித மோதல்கள் இடம்பெறுகின்ற பிரதேசங்களில் தேனீ வளர்ப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 119/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் பணியாற்றுகின்ற யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் நலன் கருதி முறையான தங்குமிட வசதிகள் அல்லது அடுக்குமாடி வீட்டுத் திட்டங்களை நிறுவுதல்,— யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு பல சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களினதும் ஆசிரியர்களினதும் போக்குவரத்து நெருக்கடிகள் மற்றும் தங்குமிட பிரச்சினைகளுக்கு நிலையானதொரு தீர்வினை வழங்குதல் மற்றும் அவர்களின் சேவையை வினைத்திறனாக பெற்றுக் கொள்வதனை உறுதி செய்வதற்காக, அந்தந்த மாவட்டங்களில் மையப்படுத்திய ஒரு பிரதேசத்தில் அல்லது பொருத்தமான ஓரிடத்தில் சகல வசதிகளுடன் கூடிய முறையான தங்குமிட வசதிகளைக் கொண்ட அல்லது அடுக்குமாடி வீட்டுத் திட்டங்களை அரசாங்கம் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.120/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— இலங்கையின் கடல்சார் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும், கடல் சார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சமுத்திர பல்கலைக்கழகமொன்றைத் (Ocean University) தாபித்தல்,— இலங்கையைச் சூழவுள்ள ஆழ்கடல் மற்றும் கரையோரக் கடல் வளங்களை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக கையாள்வதற்குத் தேவையான மனித வளங்களை உருவாக்குவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என்பதால், வட மாகாணத்தில் அதிகளவான கடல்சார் ஆற்றல் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சமூகத்தினரின் வாழ்வாதாரத்தை நவீனமயப்படுத்துவதற்கும், இளைஞர் யுவதிகளுக்கு கடல்சார் பொறியியல், கடல்சார் ஆய்வு மற்றும் நீரியல் வள முகாமைத்துவம் போன்ற துறைகளில் உயர்கல்வி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கும், அனைத்து வசதிகளுடன் கூடிய சமுத்திர பல்கலைக்கழகமொன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 121/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களிலும் கரையோரக் கிராமங்களிலும் நிலவுகின்ற கடுமையான குடிநீர் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வாக கடல்நீர் சுத்திகரிப்பு கருத்திட்டங்களை (Desalination Plants) விரிவாக்குதல்,— யாழ்ப்பாண மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்களில் நிலத்தடி நீரானது உவர் நீராக மாற்றமடைந்து வருவதனாலும், குறிப்பாக வேலணை மற்றும் நயினாதீவு ஆகிய தீவகப் பகுதிகளில் பொதுமக்கள் குடிநீர் வசதிகளைப் பெறுவதில் கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதனாலும், ஏற்கனவே நயினாதீவு போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்ற நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கொள்ளளவை அதிகரிப்பதற்கும், குறிகட்டுவான் ஊடாக குழாய் நீர் வழங்கல் கருத்திட்டத்தை துரிதப்படுத்துவதன் மூலம் மக்களின் அடிப்படைத் தேவையாகிய சுத்தமான குடிநீரை இப்பிரதேச மக்களுக்கும் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்துவதற்கு கடல்நீர் சுத்திகரிப்புக் கருத்திட்டங்களை விரிவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 122/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாண இளைஞர்களிடையே வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட செயலணியொன்றைத் தாபித்தலும் நவீன புனர்வாழ்வு நிலையங்களை அமைத்தலும்,— அண்மைக் காலமாக வட மாகாணத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் தீத்தொழில் மற்றும் போதைப்பொருள் பாவனை காரணமாக சமூகக் கட்டமைப்பானது நலிவுற்றுள்ளதோடு பாடசாலை மாணவர்களின் எதிர்காலத்திற்கும் பாதிப்பை ஏற்படுவதாலும், போதைப்பொருள் விநியோக வலையமைப்பை கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்புத் தரப்பினரின் ஒருங்கிணைப்புடன் கூடிய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான விசேட செயலணியொன்றைத் தாபிப்பதற்கும், போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்காக வட மாகாணத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய அரச புனர்வாழ்வு மற்றும் ஆலோசனை நிலையங்களை அமைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 123/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தில் பனை மற்றும் தென்னை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிக் கைத்தொழிற்சாலைகளை நிறுவி வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்,— வடக்கு மாகாணத்தில் பெருமளவில் காணப்படுகின்ற பனை மற்றும் தென்னை ஆகியவற்றை வெறும் மூலப்பொருட்களாக மாத்திரம் பயன்படுத்தாது, நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளாக உற்பத்திச் செய்யும் ஏற்றுமதிக் கைத்தொழிற்சாலைகளை அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் மாவட்ட மட்டத்தில் நிறுவுவதற்கும், அதன் மூலம் அப்பிரதேசங்களில் வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகள் மற்றும் பட்டதாரிகளின் வாழ்வாதார வழிகளைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் திட்டங்களை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 124/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவித்தலும் விவசாய மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக அக்காணிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குதலும்,— யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றச் செயன்முறையின் போது, பொதுமக்களின் காணிகள் இதுவரை முழுமையாக விடுவிக்கப்படாதிருப்பதினாலும், அதன் காரணமாக அவர்கள் தமது பாரம்பரிய விவசாய நடவடிக்கைகளிலும் மீன்பிடித் தொழிலிலும் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை இழந்துள்ளதனாலும், இதுவரை விடுவிக்கப்படாதுள்ள பொதுமக்களின் எஞ்சிய காணிகளை, தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் துரிதமாக விடுவிப்பதற்கும், பொதுமக்களின் வாழ்வாதார வழிகளை மீண்டும் கட்டியெழுப்பும் விவசாய மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக மேற்படி காணிகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 128/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தின் வன்னி மற்றும் யாழ்ப்பாணத் தீவகப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியப் பற்றாக்குறை மற்றும் டிஜிட்டல் கல்விசார் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல்,— வன்னி மற்றும் யாழ்ப்பாணத் தீவகப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை மாவட்ட ரீதியிலான நியமனங்களின் மூலம் நிரப்புவதற்கும், அப்பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் பொருட்டு நவீன கணினி ஆய்வுக்கூடங்கள் மற்றும் முறையான இணைய வசதிகளை ஏற்படுத்துவதற்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மேலதிக கல்வி வாய்ப்புகளை வழங்கும் வகையில் சிறப்பு உதவித்தொகைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 129/2026

கௌரவ ரீ. கே. ஜயசுந்தர,— இலங்கையின் பாரம்பரிய கைத்தொழில்களை மேம்படுத்துதல்,— மூங்கில், பிரம்பு, கோரை, கித்துள் போன்ற தாவரங்களின் தண்டுகள், போலித்தண்டுகள் மற்றும் இலைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பாரம்பரிய கைத்தொழில்கள் மூலம், இலங்கையின் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறைகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கமுடியும் என்பதாலும், இலங்கையின் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத் துறைகளில் தற்போது ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சிக்கு இணையாக அத்தகைய பாரம்பரிய கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு அவசியமான தொழில்நுட்பத்தை வழங்குவதற்கும், அவற்றின் உற்பத்திக்கான சந்தையை விரிவுபடுத்துவதற்கும், அவற்றிற்கு உத்தியோகபூர்வமாக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும், பாரிய அளவிலான கைத்தொழில்களை உருவாக்குவதற்காக மேற்படி தாவரச் செய்கைகளை ஊக்குவிப்பதற்கும், அதற்கான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கும், அக்கைவினைஞர்களின் உழைப்பிற்கும், திறமைக்கும் உயர்ந்த மதிப்பளிக்கவும், அவர்களின் ஓய்வுகால வாழ்க்கையைப் பாதுகாக்கும் திட்டமொன்றை உருவாக்கவும் தேவையான செயற்பாட்டுப் பொறிமுறை ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 130/2026

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— புத்தளம் புகையிரதப் பாதையில் புகையிரத சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் எரிபொருள் விலைகள் உயர்ந்துள்ள நிலையில், பொதுமக்கள் பெருமளவில் பொதுப் போக்குவரத்து சேவைகளை நாடும் போக்கு காணப்படுவதாலும், அத்துடன் தினமும் பெருமளவானோர் தொழில் நிமித்தமாகவும் வர்த்தக தேவைகளுக்காகவும் புத்தளம் பாதையில் பயணம் செய்வதாலும், அப்பயணிகளுக்கு போதுமான சேவையை வழங்கும் நோக்கில் புத்தளம் கொழும்பிற்கிடையிலான புகையிரத சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 131/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பொது இடங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் சூரிய சக்தியினால் இயங்கும் மின்னேற்ற அலகுகளைப் பொருத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— மின்சாரத்தினால் மாத்திரம் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் பயன்பாடு தற்பொழுது மக்களிடையே பிரபலமடைந்துள்ளதாலும், அது சுற்றாடல் மாசடைவதைக் குறைப்பதற்கு மிகவும் முக்கியமானதொரு நடவடிக்கையாக அமைவதாலும், தற்பொழுது நிலவும் அதிகளவிலான எரிபொருள் நுகர்வுக்கு ஒரு தீர்வாகவும் எரிபொருளுக்காகச் செலவிடப்படும் அதிக செலவினத்திற்குப் பொருத்தமானதொரு தீர்வாகவும் அமைவதாலும், மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் பயன்பாடு காரணமாக மின்சார பயன்பாடு அதிகரிக்கக்கூடும் என்பதாலும், ஏதேனும் மின்துண்டிப்பு ஏற்படுமாயின் அவற்றை உபயோகிக்கும் மக்கள் கடுமையான அசௌகரியங்களுக்கு உள்ளாவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளதாலும், மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களைப் பயன்படுத்தும் மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காகவும் மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் மூலம் தூரப் பிரயாணங்களை மேற்கொள்ளும் மக்களின் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் மின்கலங்களை மின்னேற்றம் செய்துகொள்வதற்கான வசதிக்காகவும் பொது இடங்களிலும் அரசாங்க நிறுவனங்களின் வளாகங்களிலும் சூரிய சக்தியினால் இயங்கும் மின்னேற்ற அலகுகளைப் (Solar Charging Points) பொருத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 133/2026

கௌரவ லசித் பாஷண கமகே,— வீதி ஒதுக்குப் பிரதேசங்களில் மரங்களை நடுதல், அறிவியல் ரீதியாக முகாமை செய்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுக்கான முறையான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— வீதி ஒதுக்குப் பிரதேசங்களில் உள்ள மரங்கள் பாதசாரிகளுக்கு நிழல் வழங்குவதிலும், சுற்றாடலின் அழகையும் பசுமையையும் மேம்படுத்துவதிலும், வாகனங்களிலிருந்து வெளியேறும் மாசுபடுத்தும் வாயுக்களை உறிஞ்சுவதிலும், நகர்ப் பிரதேசங்களில் உயிரியல் வழித்தடங்களாகச் (bio corridors) செயற்படுவதிலும் பாரிய பங்களிப்புக்களைச் செய்வதாலும், இலங்கையின் வீதி ஒதுக்குப்பிரதேசங்களில் உள்ள மரங்கள் தொழில்முறையாக (arborists மூலம்) நிர்வகிக்கப்படாததாலும், மின் விநியோக நிறுவனங்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA), மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (PRDA), உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் ஸ்ரீ லங்கா ரெலிகொம் போன்ற நிறுவனங்களின் ஊழியர்கள் மூலம் மின்கம்பிகளையும் வீதி சமிக்ஞைகளையும் மறைக்கும் கிளைகளை மாத்திரம் வெட்டி அகற்றுவதில் முறையற்ற வழிமுறையினை செயற்படுத்தப்படுவதாலும், சுற்றாடலின் எழிலைப் பாதுகாக்கும் வகையில் வீதி ஒதுக்குப் பிரதேசங்களின் அளவுகளை உரிய முறையில் நிர்ணயிப்பதன் மூலமும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஊழியர்களைப் பயிற்றுவித்து, தாவரங்களைப் பராமரித்து வீதி ஒதுக்குப்பிரதேசங்களில் உள்ள மரங்களை முறையாக நிர்வகிப்பதன் மூலமும் விபத்துகளையும் பேரழிவுகளையும் தடுத்துக்கொள்ளக்கூடிய முறையான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 134/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— 1988/90 காலப்பகுதியில் இடம்பெற்ற சிவில் யுத்த சூழ்நிலை மற்றும் அதுபோன்றதொரு நிலை மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல்,— 1988/90 காலப்பகுதியில் இலங்கையில் மக்கள் விடுதலை முன்னணியை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்ற சிவில் யுத்த சூழ்நிலையால் ஏற்பட்ட அழிவின் பொருளாதார ரீதியான பெறுமதியும், உண்மையில் அச்சூழ்நிலைக்கு ஏதுவாய் அமைந்த சம்பவத்தின் பின்னணியில் காணப்பட்ட இளைஞர் எழுச்சியும், அதன் அரசியல் சித்தாந்தங்களும் உள்ளடங்கலாக அவ்வாறானதொரு சூழ்நிலை மீண்டும் ஏற்படாமலிருப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் சிறந்த முறையில் ஆராய்வதற்காக ஆணைக்குழுவொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

## 2026 நவம்பர் 13, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1002/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்பொழுது கரதியான திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் கழிவுகளை அகற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) நாளொன்றுக்கு மேற்படி கிடங்கில் அகற்றப்படும் கழிவுகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி நிலைமையின் காரணமாக கரதியான பிரதேசத்தைச் சூழ வசிக்கும் பெருமளவு எண்ணிக்கையிலான குடும்பங்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதை அறிவாரா என்பதையும்;

(v) கரதியான திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு கழிவுகளை அனுப்புவதற்குப் பதிலாக, அதற்கான முறையானதொரு வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1224/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கி வரும் கல்வியியற் கல்லூரிகளின் எண்ணிக்கையினையும்;

(ii) இந்தக் கல்வியியற் கல்லூரிகளில் தற்போது சேவையாற்றி வரும் ஆசிரியக் கல்வியாளர்களின் எண்ணிக்கையினையும்;

(iii) கணிசமான எண்ணிக்கையிலான ஆசிரியக் கல்வியாளர்கள் இடமாற்றமின்றி ஒரே நிறுவனத்தில் நீண்ட காலமாக சேவையாற்றி வருகின்றனர் என்பதை அவர் அறிவாரா, என்பதையும்;

(iv) அந்த நிறுவனங்களில் சேவையாற்றும் ஆசிரியக் கல்வியாளர்களுக்காக ஒரு முறைமை ரீதியான இடமாற்றத் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(v) அவ்வாறில்லையெனின், இவ்வாறான ஆசிரியக் கல்வியாளர்களுக்காக ஒரு நியாயமானதும் வெளிப்படைத்தன்மையானதுமான இடமாற்றக் கொள்கையினைத் தாபிப்பதற்காக அரசாங்கம் அமுல்படுத்த எண்ணியுள்ள நடவடிக்கைகள் அல்லது திட்டங்கள் எவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1340/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற களப்புகளைப் பேணுதல் மற்றும் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக 2024ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள களப்புகள் யாவையென்பதையும்;

(iv) கடற்றொழிலுக்காகக் களப்புகளைப் பேணுதல் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1379/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது நாடு முழுவதிலும் நிலவும் ஆங்கில மொழி ஆசிரியர் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தகவல் தொழில்நுட்பவியல், மனைப் பொருளியல் மற்றும் அழகியல் பாடங்களுக்கு நிலவும் ஆசிரியர் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக டிப்ளோமாதாரிகளை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், தற்போது ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள டிப்ளோமாதாரிகளின் எண்ணிக்கை, பாட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும்போது அரசாங்க அங்கீகாரம் பெற்ற டிப்ளோமாக்களை வழங்கும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1534/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு முதல் தற்போதுவரை 09 மாகாணங்களிலும் இயங்கிவரும் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைகளால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை, மாகாண ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் ஒவ்வொரு அதிகாரசபையும் வருடாந்தம் ஈட்டிய வருமானம், மாகாண ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது மோசடி இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக அமைச்சால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2026 நவம்பர் 14, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1196/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெடுந்தீவில் அமைந்துள்ள பாடசாலைகளில் பௌதீக வளங்களின் குறைபாடு மற்றும் ஆளணி வெற்றிடங்கள் உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நெடுந்தீவில் அமைந்துள்ள யா/நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயம் எவ்வகைக்குரிய பாடசாலை என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பாடசாலையின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணிக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையும் தற்பொழுது பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) நிலவும் வெற்றிடங்கள் இதுவரையில் பூரணப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vi) வெற்றிடங்களைப் பூரணப்படுத்த எதிர்பார்க்கின்ற காலப்பகுதி யாதென்பதையும்;

(vii) ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மேற்படி பாடசாலையின் கற்றல் நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1507/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றி வரும் ஆசிரியர்களின் விபரங்களையும் அவர்களின் சேவைக் காலம் தொடர்பான விபரங்களையும் அவர் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி தொண்டர் ஆசிரியர்களை உதவி ஆசிரியர்களாக நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டு வருகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1529/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மாகாண பாடசாலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள, தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள, மிகையாகவுள்ள மற்றும் வெற்றிடங்கள் நிலவுகின்ற கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்வி வலயங்களின் ரீதியாகவும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினரின் ஒதுக்கீடுகளுக்கு அமைய, இரவு நேரக் காவலாளிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண ரீதியாகவும்;

வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 05 ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் பாடசாலைகளில் பதிவாகியுள்ள இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்ட சம்பவங்கள் குறித்த தகவல்கள் உள்ளனவா;

(ii) பாடசாலைகளில் உள்ள தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை;

(iii) இந்த உபகரணங்களின் பாதுகாப்பிற்காக இரவு நேரக் காவலாளிகளை நியமிப்பதற்கோ அல்லது மாற்றுப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கோ 2026ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் விசேட நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(iv) 2027ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள டிஜிட்டல் கல்வித் திட்டங்களை போதுமான பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான பராமரிப்பு நடவடிக்கைகளுடன் நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1836/2026

கௌரவ சானக மாதுகொட,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டில் அரசாங்கப் பாடசாலைகளுக்கு விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யும்போது தேசிய மாணவர் படையணியிலிருந்து 5% ஆனோர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் சேவையைப் பாடசாலை மாணவர் படையணி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் தேசிய மாணவர் படையணியில் ஆணைபெற்ற உத்தியோகத்தர்களாக கடமையாற்றுவதற்கு மேற்படி விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கு வாய்ப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான தடைகள் அல்லது வரையறைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1944/2026

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் மோதல்கள் இடம்பெற்ற காலப் பகுதியிலும் அதன் பின்னரும் கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த நபர்கள் அப்போதைய அரசாங்கத்தினால் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், புனர்வாழ்வளிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி நபர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட புனர்வாழ்வுத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) புனர்வாழ்வளிக்கப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(v) மேற்படி நபர்களின் வாழ்வாதார அபிவிருத்திக்காக தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி பயிற்சிக்குரிய உபகரணங்கள் அல்லது வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) மேற்படி நபர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதற்காக கடனுதவிகள் அல்லது ஏனைய நிதியுதவித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(viii) இன்றேல், அத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2026 நவம்பர் 16, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1685/2025

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நீதிமன்றங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மாவட்டத்தில் இயங்கும் சுற்றுலா நீதிமன்றங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி நீதிமன்றங்கள் எவ்வளவு காலமாக இயங்கிவருகின்றன என்பதையும்;

(v) அவ்வாறு இயங்கும் நீதிமன்றங்களை நீதவான் நீதிமன்றங்களாக 05 நாட்களிலும் இயக்குவதற்கான முன்மொழிவொன்று மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த முன்மொழிவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிண்ணியா சுற்றுலா நீதிமன்றத்தை நிரந்தர நீதிமன்றமாக நிறுவுவதிலுள்ள சிக்கல்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி சிக்கல்களைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பிரதேசத்தில் நிரந்தர நீதிமன்றமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2199/2026

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நாட்டில் ஓய்வூதியம் பெறும் ஓய்வுபெற்ற அதிபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அதிபர்களின் ஓய்வூதியத்தில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2278/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் நிறுவப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) அத்திணைக்களத்தின் தற்போதைய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்திணைக்களத்தின் மூலம் ஏழை மக்களுக்கான உதவி வழங்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றவா என்பதையும்;

(iv) திணைக்களத்தின் தற்போதைய பணிப்பொறுப்பு யாதென்பதையும்;

(v) இப்பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2296/2026

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க ஆவணங்களின்படி இதுவரை பதிவுசெய்யப்பட்டுள்ள குளங்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குளங்களைச் சூழவுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் அடிவாரம் அல்லது பாதுகாக்கப்பட்ட வலயத்தினுள் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் மக்கள் வதியும் வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இதுவரை அகற்றப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் அகற்றப்படவுள்ள அனுமதியற்ற கட்டுமானங்களின் எண்ணிக்கை, வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி அகற்றும் பணியை பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) அனுமதியற்ற கட்டுமானங்களை அகற்றி, சம்பந்தப்பட்ட குளங்களைச் சூழவுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகளைச் சட்டபூர்வமாகப் பாதுகாக்க அரசாங்கம் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2485/2026

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி. சூரியபண்டார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ரணவிரு கிராமங்களின் (ரணவிரு கம்மான) எண்ணிக்கை, அவை அமைந்துள்ள மாவட்டங்கள் மற்றும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு யாது என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ரணவிரு கிராமங்களுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் வழிமுறை மற்றும் அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(ii) அத்தகைய கிராமங்களை உருவாக்குதல் மற்றும் காணி அளிப்புடன் தொடர்புடைய அரசாங்க நிறுவனங்கள் அத்துடன் அவற்றின் பணிப்பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) இக்காணிகள் அல்லது வீடுகளை பிற தரப்பொன்றுக்கு விற்பனை செய்தல், பாராதீனப்படுத்தல் அல்லது குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இராணுவ வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற காணிகளின் சட்டபூர்வ உரிமையை அத்தாட்சிப்படுத்தும் வழிமுறை யாது என்பதையும்;

(ii) அக்கிராமங்களுக்கு போதுமான அளவில் துப்புரவேற்பாடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அவற்றை ஏற்படுத்துவதற்காக எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iv) குறித்த கிராமங்களிலுள்ள வீடுகளின் நிலை, எண்ணிக்கை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் சம்பந்தமாக, இறுதியாக உத்தியோகபூர்வ மதிப்பீடு செய்யப்பட்ட திகதி, கண்டறியப்பட்ட குறைபாடுகள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல், பராமரித்தல் மற்றும் பயனாளிகளின் நல்னோம்புகை விடயத்தில் அமைச்சின் பணிப்பொறுப்பு யாது என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2026 நவம்பர் 17, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

35/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையில் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் நிதியத்தினூடாக திரைப்படத் தயாரிப்பிற்காக வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கடனைப் பெற்றுக்கொண்ட திரைப்படத் தயாரிப்பாளர்களின் பெயர்களும் ஒவ்வொரு தயாரிப்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ள கடன் தொகையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேலே (i)இல் குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் வழங்கப்பட்ட கடன் தொகையினுள் இதுவரையில் அறவிடப்படாதுள்ள கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி நிலுவைக் கடன் தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2178/2026

கௌரவ சட்டத்தரணி சரத் குமார,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ளதும் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளதுமான தொல்பொருள் வளவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குறித்த தொல்பொருள் வளவுகள் யாவை என்பதையும்;

(iii) இத்தொல்பொருள் வளவுகள் எந்தெந்த தொல்பொருள் வலயங்களுக்குள் அடங்குகின்றன என்பதையும்;

(iv) குறித்த ஒவ்வொரு வலயத்திற்கும் உரித்தான நிலப்பரப்பு வெவ்வெறாக யாதென்பதையும்;

(v) அவ்வலயங்களினுள் அமைந்துள்ள தொல்பொருள் வளவுகளில், தொல்பொருள் திணைக்களத்தினால் தற்போது முழுமையாகவோ பகுதியளவிலோ பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ள வளவுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொல்பொருள் திணைக்களத்தினால் பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ள வளவுகளில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்காக திறக்கப்பட்டுள்ள வளவுகள் யாவை என்பதையும்;

(ii) அந்த வளவுகளைப் பார்வையிட வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு துப்புரவேற்பாட்டு வசதிகள், பிரவேச வழிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் போதுமான அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2206/2026

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில், குடிநீர்ப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ள கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கிராமங்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2270/2026

கௌரவ ருவன் மாபலகம,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அரச வீடமைப்புத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வீடமைப்புத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, மக்களிடம் கையளிக்கப்பட்ட ஆண்டு, வீடமைப்புத் திட்டத்தின் நிலப்பரப்பு மற்றும் தற்போதுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நிட்டம்புவ, ரன் பொகுணுகம வீடமைப்புத் தொகுதிக்குள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள 'ரனிந்துகம' மற்றும் 'குரு கம்மானய' வீடமைப்புத் திட்டங்களுக்காகப் பயனாளிகளைத் தெரிவுசெய்கையில் பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி இரண்டு வீடமைப்புத் திட்டங்களிலும் அமைந்துள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி திட்டங்களின் கீழ் ஒரு வீட்டு அலகிற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள உதவித் தொகை/கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அப்பயனாளிகள் வசிக்கும் காணிகளின் உரிமையை அவர்களுக்குக் கையளிப்பதற்காகச் செலுத்தப்பட வேண்டிய தொகையைத் தீர்மானிக்கும் முறைமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2511/2026

கௌரவ டபிள்யூ.எச்.எம்.தர்மசேன,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் பிரதேச சபைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) பரந்த நிலப்பரப்பைக் கொண்ட செவனகல பிரதேசத்திற்கு, பிரதேச சபை ஒன்று இல்லாத காரணத்தினால் அது தற்போது தனமல்வில பிரதேச சபை ஆளுகைக்கு உட்படுகிறது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், செவனகல பிரதேசத்திற்காக பிரதேச சபை ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) கல்கமுவை, நெல்லியத்த, முல்லேகம மற்றும் இங்கினியாகல ஆகிய 04 கிராம சேவகர் பிரிவுகள் மடுல்ல பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்டவை என்பதை அறிவாரா என்பதையும்;

(vi) மேற்படி பிரிவுகளிலுள்ள மக்கள் பிபிலை மற்றும் மெதகம ஆகிய பிரதேச செயலகங்களைக் கடந்து சுமார் 90 கிலோமீற்றர் பயணம் செய்து மடுல்லை பிரதேச செயலகத்திற்குச் செல்ல நேரிடுவதால், அந்த இடரைத் தவிர்த்துக்கொள்வதற்கு அந்த பிரிவுகளை பிபிலை பிரதேச செயலகப் பிரிவிற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2026 நவம்பர் 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

165/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கன் விமானச் சேவை அரசாங்க வங்கிகளிடமிருந்து பெற்றுள்ள கடன்களின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியுள்ள கடனின் அளவு யாதென்பதையும்;

(iii) முந்தைய அரசாங்கத்தின் காலத்தில் ஸ்ரீலங்கன் விமானச் சேவையை மறுசீரமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு யாதென்பதையும்;

(iv) நாட்டின் வரி செலுத்தும் மக்களுக்கு சுமையாக அமையாத வகையில் மேற்படி நிறுவனத்தைப் பராமரித்துச் செல்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

689/2025

கௌரவ ரோஹண பண்டார,— பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகர சபையின் கீழ் இயங்குகின்ற பிரிவுகள் மற்றும் திணைக்களங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரிவுகள் மற்றும் திணைக்களங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மேற்படி ஒவ்வொரு பிரிவிலும் பணியாற்றுகின்ற நிரந்தர, அமய மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி திணைக்களங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கையும் தற்போது நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) ஊழியர் பற்றாக்குறையானது கொழும்பு மாநகர சபையின் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமைந்துள்ளதால், அந்நிலையைச் சீர்செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2046/2026

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெரும்பாலான பிரதேசங்களில் பாரம்பரிய மருத்துவ முறைகள் மூலம் வழங்கப்படும் முதியோர் பராமரிப்புச் சேவை நிலையங்கள் போதுமானதாக இன்மையால், முதியோர்கள் தூரப் பிரதேசங்களுக்குச் சென்று சிகிச்சைகளைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆரம்ப சுகாதாரச் சேவை நிலையங்களை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களின் கீழ் பாரம்பரிய மருத்துவ சேவைகளுக்காக மருத்துவர்களை நியமித்து சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தொற்றா நோய்களுக்குச் சுதேச மற்றும் மேற்கத்தேய மருத்துவச் சிகிச்சைகளை ஒருங்கிணைத்து சிகிச்சைகளை வழங்குவதற்கான தேசியக் கொள்கை அல்லது வேலைத்திட்டம் ஏதேனும் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதையும்;

(iv) தொற்றா நோய்கள், மூளை முடக்குவாதம், டவுன் சிண்ட்ரோம், பார்கின்சன் நோய், நீரிழிவு நோய் மற்றும் புற்றுநோய் போன்ற கடுமையான நோய்களுக்குச் சில பாரம்பரிய மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சைச் சேவைகளை 25 மாவட்டங்களிலும் பரவலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சுதேச மருத்துவச் சேவையில் உள்ளிருப்புப் பயிற்சியைப் பூர்த்தி செய்தவுடன், மருத்துவர்களுக்கு 'வதிவிட மருத்துவ உத்தியோகத்தர்களாக' சேவையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) வேலையற்றிருக்கும் சுதேச மருத்துவர்களுக்கு எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகளை வழங்குவதற்காக அமைச்சிடம் திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2107/2026

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) உடவளவை தேசிய பூங்காவிற்கும் லுணுகம்வெஹெர தேசிய பூங்காவிற்கும் இடையில் உள்ள யானை வழித்தடம், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி வழித்தடத்தின் இருமருங்கிலும் பாதுகாப்பு மின்சார வேலி அமைக்கப்பட்ட திகதி யாது;

(iii) மேற்படி மின்சார வேலியை அமைப்பதன் முக்கிய நோக்கம் யாது;

(iv) யானை பாதுகாப்பு வேலியை அமைப்பதற்குச் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு;

(v) 2018 ஆம் ஆண்டில் யானை பாதுகாப்பு வேலி இருக்கும் போதே அதிகாலை வேளையில் கிராமத்துக்குள் புகுந்த ஒரு யானை பாடசாலை மாணவரொருவரைக் கொன்றுள்ளதை அறிவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) யானை வழித்தடத்தின் இருமருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலியில் பலஹருவ கிராமம் உள்ளடங்கும் பகுதியில் பிரதான மின்சார வேலி தற்போது செயலிழந்துள்ளதென்பதை அறிவாரா?

(ii) மேற்படி மின்சார வேலியை அகற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அந்த முடிவு எடுக்கப்பட்ட திகதி மற்றும் அதன் நோக்கம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2545/2026

கௌரவ நிஷாந்த பெரேரா,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மாதிரிக் கிராமங்களின் கீழ் காலி மாவட்டத்தில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கிராமங்கள், ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வீட்டு பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2026 நவம்பர் 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

982/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபை, 2025ஆம் ஆண்டில் மின்சார விற்பனை மூலம் ஈட்டிய மொத்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சபை, அந்த ஆண்டில் மேற்கொண்ட மொத்தச் செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iii) 2025ஆம் ஆண்டு சனவரி மாதமளவில், ஓர் அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக ஏற்பட்ட சராசரிச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) இலங்கை மின்சார சபை 2023, 2024 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளில் ஈட்டிய இலாபம் / அடைந்த நட்டம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) சபை, 2025ஆம் ஆண்டில் நட்டம் அடைந்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vi) அக்காலப்பகுதியில் மின்சாரக் கட்டணங்களில் எத்தனை தடவைகள் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(vii) சபைக்கு 2023ஆம் ஆண்டு தொடக்கம் 2025ஆம் ஆண்டு வரை, பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள நிதியின் அளவு மற்றும் அவை வழங்கப்பட்ட திகதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

990/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில், 'வன அடர்த்தி' தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்கெடுப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்ட வருடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கணக்கெடுப்பின் போதும் இலங்கையின் 'வன அடர்த்தி' மாவட்டம் மற்றும் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) சுற்றுச்சூழல் சமநிலையை பாதுகாக்கும் பொருட்டு 'வன அடர்த்தி' மட்டத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1671/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் கம்பனியின் கீழுள்ள எப்பாவல பொஸ்பேட் நிறுவனத்தின் வசம் KQ 4329 என்ற இலக்கமுடைய வாகனமொன்று உள்ளதென்பதையும்;

(ii) பொஸ்பேட் கம்பனியின் தலைவர் மேற்படி வாகனத்தைச் செலுத்திச் செல்லும்போது அவ்வாகனம் விபத்துக்குள்ளானது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி வாகனம் பயன்பாட்டுக்குத் தகுதியற்றது (condemned) எனக் காப்புறுதிக் கம்பனியால் தகுதியின்மை அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அமைச்சின் செயலாளர், மேற்படி வாகனத்தை தலைவர் பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்கியிருந்தாரா என்பதையும்;

(ii) காப்புறுதிக் கம்பனியானது மேற்படி வாகனத்திற்கு ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டை ஈடு செய்யுமா என்பதையும்;

(iii) இன்றேல், தலைவரிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2458/2026

கௌரவ தனுஷ்க ரங்கனாத்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் உள்ள புகையிரதக் கடவைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி புகையிரதக் கடவைகளின் பாதுகாப்பிற்காக தற்போது கடைப்பிடிக்கப்படுகின்ற முறைமை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு முறைமையின்படி பாதுகாக்கப்பட்டுள்ள புகையிரதக் கடவைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) புகையிரதக் கடவைகளின் பாதுகாப்பு முறைமைகளில் உரிய முறையில் இயங்காத மணியோசை மற்றும் சமிக்ஞை முறைமைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி சமிக்ஞை முறைமைகளை உரிய முறையில் அமுல்படுத்துவதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vi) புகையிரதக் கடவைகளில் வருடாந்தம் சேவைக்கட்டணம் அறவிடப்படுகின்ற கடவைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) மேற்படி கட்டணங்களாக 2025ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற பணத்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2505/2026

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென்மாகாணத்தில், காலி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பலபிட்டிய கல்விக் கோட்டத்தில் இயங்குகின்ற அரச பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கல்விக் கோட்டத்தினுள் பல்வேறு காரணங்களால் மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகள் மூடப்படுவதற்கான காரணிகள் யாவையென்பதையும்;

(iv) கோட்டத்தினுள் 1981 ஆம் ஆண்டின் 65ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற அல்லது மேற்படி சட்டத்திற்கு உட்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மூடப்பட்டுள்ள அல்லது மாணவர்கள் இல்லாதபடியால் இயங்காத நிலையில் உள்ள பாடசாலைகள் வசமுள்ள கட்டடங்களையும், காணிகள் உள்ளிட்ட பொதுச் சொத்துக்களையும் சமுதாயக் கல்வி நடவடிக்கைகள், தொழிற்பயிற்சி போன்ற பயனுறுதி வாய்ந்த பொது நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு அமைச்சின் வசமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(ii) மேற்படி அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?